**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**மேட்டூர்,**

**தேதி: 05.02.2026**

**OS. No. 09/2021**

**வழக்கு சாட்சி PW.2–ரங்கசாமி, த/பெ.லட்சுமண கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் வெடிக்காரனூரில் ஊர் கவுண்டராக உள்ளேன். ஊர் கவுண்டர் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதா அல்லது பரம்பரையாக வருவதா என்றால் பரம்பரையாக வருவது ஆகும். ஊர் கவுண்டர் பதவி என்பது கோவில் நிர்வாகம் மற்றும் ஊரிலுள்ளவர்களின் நல்லது கெட்டதுகளில் நான் முன்னிருப்பது என்றால் சரிதான். எனக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள் உள்ளனர். எனக்குள்ள சொத்து அனைத்தும் பூர்வீக சொத்து தான். என்னுடைய பூர்வீக சொத்துக்களை என் பிள்ளைகளுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்துள்ளளேன், ஆவணங்களாக இன்னும் ஏற்படுத்தவில்லை. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை வாதி சாந்தி தான் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். வெடிக்காரனூர் கிராமத்திற்கும், கனவாய் காடு கிராமத்திற்கும் சுமார் 1–1/2 கி.மீ தூரம் இருக்கும்.

2) வாதி வசந்தியின் மாமனார் 1ம் பிரதிவாதி மாதையன் ஆர்.கே.ஜீவல்லரியில் மேலாளராக பணி செய்து வந்தார். வாதியின் மாமனாரின் சொத்துக்கள் அனைத்தும் அவர் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மொத்தம் மூன்று வாரிசுகள் உள்ளனர். 2ம் பிரதிவாதி பாப்பாத்தி 1ம் வாதி மாதையனின் மனைவி என்றால் சரிதான். மாதையன் அவருடைய சொத்தில் இரண்டு ஓலை வீடுகள் மற்றும் ஒரு அட்டை வீடு கட்டியுள்ளார். மாதையனின் மகனான 3ம் பிரதிவாதி குமரேசன் என்ன வேலை செய்கிறார் என்றால் ஒரு கடை வைத்திருந்தார். 1ம் வாதியின் கணவர் டாஸ்மார்க்கில் வேலை செய்து வந்தார். 4ம் பிரதிவாதி சரவணகுமார் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியவில்லை.

3) 1ம் வாதி வசந்திக்கும், மகேந்திரனுக்கும் எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியவில்லை. திருமணத்திற்கு பின் 1ம் வாதியும், அவரது கணவரும் மாதையன் சொத்திலுள்ள அட்டை வீட்டில் தான் குடியமர்த்தப்பட்டார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி எவ்வளவு படித்துள்ளார் என்றால் தெரியவில்லை, ஆனால் வேலைக்கு சென்று வருகிறார். 1ம் வாதி அதிகம் படித்துள்ளதால் கிராமத்தில் வாழ விருப்பமில்லை என்று அவரது வீட்டிலுள்ளவர்களிடம் பிரச்சனை செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. 1ம் வாதி அவ்வாறு பிரச்சனை செய்ததால் தான் மகேந்திரன் தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மகேந்திரன் இறந்ததற்கு டாஸ்மார்க்கிள் இருந்து வழங்கப்பட்ட பணம் யார் யார் எவ்வளவு எடுத்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) 1ம் வாதியின் குழந்தைகள் அவரது தாத்தா பாட்டியான 1, 2 பிரதிவாதிகளை சென்று பார்க்கிறார்களா என்றால் அவர்கள் எதுவும் கொடுப்பதில்லை, அதனால் இவர்களும் சென்று பார்ப்பதில்லை. தாத்தா, பாட்டி பணம் கொடுத்தால் தான் சென்று பார்க்கவேண்டுமா, அல்லது இல்லை எனினும் அன்பால் சென்று பார்க்கலாமா என்றால் அன்பால் சென்று பார்க்கலாம், ஆனால் ஏதேனும் கொடுத்தால் பிள்ளைகள் ஆர்வத்துடன் சென்று பார்ப்பார்கள். டாஸ்மார்க்கிள் வழங்கப்பட்ட பணம் கூட 2ம் பிரதிவாதி பாப்பாத்தி 1ம் வாதியின் குழந்தைகளுக்கு தான் கொடுத்தார் என்றும், 2ம் பிரதிவாதி அவர்களுக்காக எது வேண்டுமானாலும் செய்ய தயாராக உள்ளார்கள் என்றும், ஆனால் அவர்கள் தான் சென்று பார்ப்பதில்லை என்றால் எனக்கு தெரியாது.

5) 1ம் வாதி என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதி நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தில் வருடம் ரூ.15,000/-கொடுப்பதாக எதுவும் சொல்லவில்லை என்றும், ஆனால் அவர் சொல்லாத சங்கதி குறித்து நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாதையன் கிட்னியில் பாதிப்பு ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என்றால் சரிதான். இந்த சமயத்திலும் அவரது பேத்திகள் சென்று பார்ப்பதில்லை என்றும், 1ம் வாதியும் சென்று விசாரிப்பதில்லை என்றும்,

அவர்கள் ஏதேனும் பயன் அடைய வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதற்கு ஆதரவாக நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் தன்மை குறித்து தெரியாமல் வழக்கிலில்லாத புதிய சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றும், 1ம் வாதி அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் மனு குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கும், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள பிரச்சனை சம்மந்தமாகத்தான் இந்த வழக்கு என்றும், 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அதனால் 8 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.